# கலப்பு பண்ணை திட்டம் ஓர் அனுபவம்



அண்மைகாலத்தில், கேரளாவில் உள்ள பல கல்வியறிவுள்ள இளைஞர்கள் விவசாயம் செய்ய முன்வருகின்றனர். கடந்த இருபது ஆண்டுகளாக விவசாயம் செய்யும் ஒரு விவசாயி மேற்சட்டை கூட இல்லாமல் பாடுபட்டான், ஆனால் இன்றைய சூழல், படித்த கல்வியறிவுற்ற இளைஞர்கள் ஆழ்ந்த ஈடுபாட்டுடன் விவசாயத்தில் முன்னேறி வருகின்றனர். இது விவசாயத்தின் வெற்றியை எடுத்துக்காட்டுகிறது என்று கூறுகிறார். இந்திய நறுமண பொருள் ஆராய்ச்சி கழகத்தை சார்ந்த இயக்குநர் முனைவர். வி.எ.பார்த்தசாரதி இயற்கை விவசாய முறையும், இளைஞர்களின் முயற்சியும் ஒன்றாக இணைந்து சரியாக செயல்படும் ஆயின், தோல்வி என்ற சொல்லே மறைந்து வெற்றி ஒன்றே இருக்கும்.

**தகுதியான வழிகாட்டுதல்:**

மேலாம் கூறுகையில், “திரு ராய் தாமஸ் (Roy Thamas) கேரளாவின் கோழிக்கொடு மாவட்டத்தை சார்ந்த படித்த விவசாயி இவர் அனைவரின் முன்மாதிரியாகவும், எடுத்துக்காட்டாகவும் திகழ்வதாக கூறினார். இவர் அறிவியலாளர்களின் (விஞ்ஞானி) ஆலோசனை மற்றும் வழிகாட்டுதலின் படி தனது எட்டு ஏக்கர் நிலத்தில் 120 தென்னைகளும், 400 அரிக்கா மரங்களும் 100 கோக்கோ செடிகளையும் வளர்க்கிறார். இதன் மூலம் இவருக்கு வருமானமாக ஆண்டுக்கு இரண்டு இலட்ச ரூபாய் கிடைக்கிறது.

**ஊடுபயிர்:**

இவற்றில் தென்னை மரங்களில் சுமார் 50 மிளகுக்கொடிகளை படரவிடப்பட்டுள்ளது. மேலும் வாழை, மஞ்சள், இஞ்சி ஆகியவையும் ஊடுபயிராக வளர்க்கிறார். இதில் முக்கிய வருமானமாக 1,26,000 ரூபாயை தென்னை, அரிக்கா நாட்டி வாழை, இஞ்சி மற்றும் மஞ்சலில் இருந்து பெறுகிறார்.வேளாண் அறிவியல் நிலை விஞ்ஞானிகள் வழங்கிய ஆலோசனையின் பேரில் பிரதமரின் ரோஹர் யோஜீனா திட்டத்தில் கடனுதவிக்கு விண்ணப்பித்தார்.இதன் மூலமாக கொட்டகை அடைத்து அதில் முயல் வளர்க்க ஆரம்பித்தார். இதில் இரண்டு வீதமாக கொட்டகையை வடிவமைத்தார். ஒன்று 10 முயல்கள் வளர்க்கும்விதமான பெரியகொட்டகையும் மற்றொன்றை 4 முயல்கள் வளர்க்ககூடிய சிறிய கொட்டையாகவும் வடிவமைத்தார். இவ்வாறாக தற்போது 60 முயல்கள் வளர்க்கின்றார்.

ஒவ்வொரு முயலுக்கும் தினசரி உணவு மற்றும் மருந்து செலவுகாக 2 ரூபாய் செலவிடுகிறார். ஒரு பெண் முயல் 5 முதல் 6 குட்டிகள் தருகிறது. இவை பிறந்து 45 நாட்கள் ஆன பிறகு ஒவ்வொரு ஜோடியும் 350

ரூபாய்க்கு விற்கப்படுகிறது.இவ்வாறாக இதுவரை முயல்கள் விற்பனை மூலம் 6000 ரூபாய் லாபம் கண்டுள்ளார்.

**கோழி வளர்ப்பு:**

மேலும் இரண்டு கோழி வளர்ப்பு பண்ணைகளும் அமைத்துள்ளார். ஒவ்வொரு கொட்டகையும் 250 முதல் 350 கோழிகள் வரை வளர்க்கும் இடமுடையது. கட்சசேரி (Hatchery) அரசிடமோ, அல்லாது கேரளா வேளாண் பல்கலைக்கழகத்தில் இருந்தோ, ஒரு நாள் வயதான கலிங்கா அல்லது கிராம இரக கோழிக் குஞ்சுகளை வாங்கி, அவை 45 நாட்கள் ஆகும் வரை வளர்க்கப்படுகிறது. பின் ஒவ்வொரு கோழியில் இருந்தும் ரூபாய் 10 கிடைக்குமாறு விற்பனை செய்கிறார். இதுவரை 5 குழுக்களாக சுமார் 3200 கோழிகளை 32000 ரூபாய்க்கு விற்பனை செய்துள்ளார்.கூடுதலாக அலங்காரம் பறவைகளுக்கான கொட்டகையினில் பறவைகளை வளர்த்து, அதன் மூலம் ஒரு நாளுக்கு ஒரு பறவை விற்பனை மூலம் 150 ருபாய் பெறுகிறார். இதுவரை 30 பறவைகளை நான்கு மாதங்களில் 5100 ரூபாய் விற்று லாபம் அடைத்துள்ளார். இது மட்டும் இன்றி பறவைகளின் கழிவுகள் மற்றும் இலைச்சருகுகளை கொண்டு இயற்கை உரம் தயாரித்து நிலங்களுக்கு உபயோகித்தார். மேலும் முயலின் கழிவினை கொண்டு வீட்டு உபயோகத்திற்கான எரிவாயு தயாரித்தார்.இவ்வாறான பல கலப்பு பண்ணை திட்டத்தின் காரணமாக கேரள அரசின. வேளாண் துறை இவருக்கு “சிறந்த விவசாயி” எனும் விருதினை தந்து சிறப்பித்தது.

**தொடர்புக்கு:**
திரு.ராய் தாமஸ்
ஆன்ட்ரோத் வீடு
வண்ணத்திசீறா அஞ்சல்
மருதோம்கரா
கோழிக்கோடு மாவட்டம் கேரளா - 673 513
அலைபேசி : 09447494078
முனைவர் பி.எ.மேத்திய, பயிற்சி ஒருங்கிணைப்பாளர்
மின் அஞ்சல் :kvk@spices.res.in
தொலைபேசி : 0496 2662372
அல்லது முனைவர்.பி.கே.யாகோப், முதன்மை விஞ்ஞானி
IISR
மின் அஞ்சல் : jacobtk@spices.res.in